[17th August 1963

பள்ளிகளை தேசியமயமாக்குதல்

* 214 *கேள்வி.—திரு. கே. நாராயணசாமிப்பிள்ளை :* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லாப் பள்ளிகளையும் தேசியமயமாக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. செ. மாதவன் : இப்போது அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய பள்ளிகளை தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக் கூடிய வகையில் சட்டத்தில் இடமிருக்கிறதா ? அப்படியிருந்தால் அதை மாற்றுவதற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் உத்தேசம் இல்லை. தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதாகவும் எண்ணம் இல்லை.

மாற்றப்பட்ட பகுதிகளிலுள்ள என். ஜி. ஓ-க்கள்

* 215 *கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு மாற்றப்பட்ட பகுதிகளில் உள்ள என்.ஜி.ஓ.-க்களுக்கு தமிழ் நாட்டில் கொடுக்கப்பட்டு வந்த அலவன்சும் சம்பளமும் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 1959-ம் ஆண்டு ஆந்திரப் பிரதேச-சென்னை (எல்லை மாற்றச்) சட்டத்தின்கீழ் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்டு இங்குள்ள அரசாங்க இலாக்காக்களில் நியமிக்கப்பட்டுள்ளவர்களின் சம்பளத்தை, 1960-ம் ஆண்டு சென்னைப் புதிய சம்பள வித விதிகளை அனுசரித்து 1-6-1960 முதற்கொண்டு நிச்சயிக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட இலாகாத் தலைவர்களுக்கு அரசினர் சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளனர்.

The Government have recently instructed the concerned Heads of Departments to have the pay of the persons allotted to this State from Andhra Pradesh State under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959, and absorbed in their departments, fixed with effect from 1—6—1960, under the Madras Revised Scales of Pay Rules, 1960.

Public Health and Medical Department (merger of)

* 216 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a final decision has been taken by the Government on the question of the merger of Public Health and Medical Department into one department;

(*b*) if so, the details of the same; and

(*c*) whether a copy of the Report submitted by the official committee on this proposal will be placed on the table of the House ?